2022 ஏப்ரல் 13] [திரு. தங்கம் தென்னரசு]

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்போதுகூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான வகையில், மிகச் சிறந்த முறையில் இந்த விஷயத்தை மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு, எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு prepared *ஆக வந்திருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடாக இருக்கிறது என்கிற அளவிற்குப் பாராட்டினார்கள். இந்தப் பிரச்சினையை நாங்களும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறோம், நிச்சயமாக இதைச் செய்து கொடுக்கிறோம் என்று அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மிகுந்த ஆர்வத்தோடு, ஏற்கெனவே இதுகுறித்துப் பேசியிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இந்த விலையேற்றத்தைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–20

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை. .. (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்று 4 மானியக் கோரிக்கைகள், 3 மாண்புமிகு அமைச்சர்கள் பேச வேண்டும்.* Please. *(குறுக்கீடு) ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன விஷயம் குறித்து பேசப் போகிறீர்கள்? இதே விஷயமா? (குறுக்கீடு) இல்லை, இதே பருத்தி விவகாரமா? (குறுக்கீடு) நான் திங்கட்கிழமை எடுத்துக்கொள்கிறேன். நான் அடுத்த* agenda*–வுக்கு வந்துவிட்டேன். நான் பிறகு எடுத்துக்கொள்கிறேன். இன்று முக்கியமான 4* Demands *இருக்கின்றன. 3 மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.* Please, *நான் உங்களுடையதை திங்கட்கிழமை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் அடுத்த* agenda*–வுக்குப் போய்விட்டேன்.* Please, *தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.*